## அடக்குமுறைகளால் தி.மு.க.வை அசைத்துவிட முடியாது;

### அடிக்க அடிக்க உயர்ந்து எழும் பந்துபோல் எங்கள் இயக்கம் வீறுகொண்டு எழும்!

# பொய் வழக்குகளை - பழிவாங்கும் நடவடிக்கைகளை சட்டரீதியாக எதிர்கொள்வோம்!

### முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. பேட்டி!

சென்னை, அக்.28 -

மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.47 லட்சம் மதிப்பீட்டில், சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 98-வது வார்டு, அயன்புரம் கே.கே. நகர் 10-வது தெருவில் புதிய உடற்பயிற்சிக் கூடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மேனாள் அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ., சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், மண்டலக் குழுத் தலைவர் கூ.பீ. ஜெயின், வே.வாசு, மாமன்ற உறுப்பினர் பிரியதர்ஷினி வட்டக் கழக செயலாளர்கள் ச. மனோகரன், தேவராஜ் ஏ வேதா சீ.விக்னேஷ், தி.ஸ்டாலின் ஜிம். வி. சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு புதிய உடற்பயிற்சிக்கூடம் கட்டுவதற்கான பணிகளைத் தொடங்கி வைத்தனர்.



நிகழ்ச்சிக்குப் பின்னர் முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் கைது தொடர்பான செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த அவர்,

"திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக இது போன்ற அவதூறுகளையும், உண்மைக்குப் புறம்பான வழக்குகளையும், அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைகளையும் தொடர்ந்து சந்தித்து வருகிறது.

இதுபோன்ற அடக்குமுறைகள் வருகின்றபோது தான் எங்கள் இயக்கம் இன்னும் வீறுகொண்டு எழும். அடிக்க அடிக்க உயர்ந்து எழும் பந்தைப் போல, எத்தனை அடக்குமுறைகள் வந்தாலும் எங்கள் கழகம் மேலும் எழுச்சி பெறும்.

இதுபோன்ற ஆயிரக்கணக்கான பழிவாங்கும் நடவடிக்கைகளை நாங்கள் ஏற்கெனவே சந்தித்திருக்கிறோம். இந்த நடவடிக்கையையும் அவரும் சட்டரீதியாக எதிர்கொள்வார்; கழகமும் சட்டரீதியாக எதிர்கொள்ளும்" என்றார்.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்த கேள்விக்குப் பதிலளித்த அவர்,

"கடந்த 17-ஆம் தேதி பிரியதர்ஷினி என்ற குழந்தை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டதாகவும், அந்தச் சம்பவம் குறித்த தகவல்கள் வெளியே வராமல் தடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அறுவைச் சிகிச்சைக்குப் பின்னரும் அந்தக் குழந்தை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுபோன்ற கொடூரமான சம்பவங்கள் நடைபெறுவதற்கு, குற்றங்களைத் தடுக்கவும் குற்றவாளிகள் மீது துரித நடவடிக்கை எடுக்கவும் ஆட்சியாளர்கள் தவறுவதே காரணம்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக, இரண்டு வயதுக் குழந்தைகள் முதல் 80 வயது முதியவர்கள் வரை பாலியல் வன்கொடுமைகளுக்கும் சீண்டல்களுக்கும் ஆளாகும் சம்பவங்கள் நடைபெறுவதாக வரும் செய்திகள் மிகுந்த வேதனையளிக்கின்றன.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய வலியுறுத்தியும், இதுபோன்ற சம்பவங்களைக் கண்டித்தும், கழகத் தலைவரின் அனுமதியுடன் வருகின்ற அக்டோபர் 31-ஆம் தேதி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த அறிவிப்பு வெளியிட்டுள்ளோம்" என்றார்.

## பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; நான் 'கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல், திசை திருப்பி அறிக்கை விடுதே தி.மு.க...' ன்னு வன்னி அரசு கேட்டிருக்காரே? தெரியுமா?

**பட்டணம் :** **ஆமாமய்யா; தெரியும். முதல்லியே 'அவர்' அறிக்கை வந்தவுடனே, ஜனநாயகத்துக்கு பாதிப்பு ஏற்பட்டா அதை கண்டிக்க தி.மு.க. தயங்காது'ன்னு சொல்லிட்டு தான், சில கேள்விகளை தி.மு.க. கேட்டது. அதுக்கு பதில் சொல்லாம, த.வெ.க. சார்பில் 'இவர்' தான் அறிக்கை விட்டுட்டு இருக்காரு. என்ன பண்றது, எல்லாம் பதவி படுத்தும்பாடு.**

# திருவாரூர் மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை

திருவாரூர், அக் 28 -

திருவாரூர் மாவட்டச் செயற்குழு கூட்டம் நாளை (29.10.2026 - வியாழக்கிழமை) நடைபெற இருக்கிறது. இதுகுறித்து மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது.



திருவாரூர் மாவட்டச் செயற்குழு கூட்டம் நாளை (29.10.2026 - வியாழக்கிழமை) காலை 10.00. மணியளவில், மாவட்ட அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமையிலும், தலைமைக் கழக பிரதிநிதிகள் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் இள.புகழேந்தி, கழக செய்தி தொடர்பு இணை செயலாளர் தமிழன் பிரசன்னா ஆகியோரது முன்னிலையிலும், திருவாரூர் வர்த்தக சங்க திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

அதுசமயம் 16 வது கழக அமைப்புத் தேர்தலுக்கான நிர்வாக மாற்றங்கள் மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசனைகள் நடைபெறஉள்ளது.

இந்த கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்டச் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# சேலம் கிழக்கு மாவட்டக் கழக மகளிர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. அறிக்கை!

சேலம், அக். 28 -

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சேலம் கிழக்கு மாவட்டக் கழக மகளிர் நிர்வாகிகள் கூட்டம் நாளை (29.10.2026 -வியாழன்கிழமை) காலை 10.00 மணிக்கு வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க. ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் மாவட்ட கழக செயலாளர் ஆகிய எனது தலைமையிலும், கழக மகளிர் அணி அமைப்பாளர் திரு மதி.ஜெ.பாரதி, கழக மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் திருமதி. மு.சாந்தி, மாவட்ட கழக துணை செயலாளர் திரு மதி.மு.கோமதி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.



இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர், கழக செயலாளர்கள், மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், மற்றும் கிளை கழக மகளிர் துணை செயலாளர்கள், கழக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி தலைவர்கள், துணை தலைவர்கள், மற்றும் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக மகளிர், மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள், நகர, பேரூர் மன்ற மகளிர் தலைவர்கள், துணை தலைவர்கள், உறுப்பினர்கள், முன்னாள் ஒன்றிய குழு மகளிர் தலைவர்கள், துணை தலைவர்கள், உறுப்பினர்கள், முன்னாள் தலைவர் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. கழகத் தலைவர் அவர்களின் அறிவிப்புகிணங்க வருகின்ற 3110 2026 அன்று மகளிர் அணி சார்பாக ஆர்ப்பாட்டம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


29ஆம் ஆண்டு நினைவு நாள்



28.10.2026

கலைமாமணி **எஸ்.எஸ்.சிவசூரியன்** (நடிகர்)

நீங்கள் மறைந்த இந்நாளில் எங்களின்
கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிக்கிறோம்
என்றும் உங்களின் நினைவில் வாழும் நெஞ்சங்கள்

மகன்கள்: எஸ். சிதம்பரம், எஸ். கந்தக்குமார், பூச்சி எஸ். முருகன்

மகள்கள் : ஸ்ரீமதி பேபி (எ) அன்புத்தங்கை ஸ்ரீமதி வடிவு,
ஸ்ரீமதி சாந்தி, ஸ்ரீமதி ராஜாமணி, ஸ்ரீமதி கற்பகவள்ளி

மற்றும் பேரன், பேத்திகள், மருமகன்கள், மருமகள்கள்


## இராயபுரம்

# கோபிநாத் இல்ல விழா!

சென்னை, அக். 28 -

இராயபுரம் கிழக்கு பகுதி 49வது வட்ட கழக பொருளாளர் கே.ஆர். கோபிநாத் இல்ல விழாவில் இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா. செந்தில்குமார் பொதுக்குழு உறுப்பினர் வே. சிவகுமார், வட்ட பொறுப்பாளர் க.கலைச்செல்வன்,

மாவட்ட பிரதிநிதி எல். சீனிவாசன், ஏ.வேணு கோபால், சி. லிங்கேசன், சி. மனோகரன், எல். கிருஷ்ண ஹரிஹரன், கே. பாலகிருஷ்ணன், ஜி.விநாயகமூர்த்தி, எம். பழனி, எம்.வி.நரசுமணி, ஏ.குமார், ஜி.வனிதா, பா.சுதாகர், ஜி.கோதண்டன், த.கு. பன்னீர்செல்வம்,

இ.கதிரவன், கே.பாஸ்கரன், சி.ஏ.மகேஷ்குமார், ஏ.கே.பி. நிதீஷ் குமார், எச்.சரவணன், எஸ்.கோபி குமார், ஆர்.பாரதிதாசன், கே.அரசு, எம்.தங்கராஜ், கே.சுப்பிரமணியன், எஸ்.சங்கர், வி.கலைச்செல்வம், பி. மோகனசுந்தரம், கே.பாரத், சி.சின்னசாமி, ம.வே. வேலு, பிரசாந்த் மற்றும் தண்டையார்பேட்டை2 பணிமனை தொ.மு.ச. சங்கத்தினர் கலந்து கொண்டுவாழ்த்தினர்.

### பெண்களின் பாதுகாப்பு முதல் மின்பற்றாக்குறை வரை - மக்கள் பிரச்சினைகளில் த.வெ.க. அரசின் மெத்தனப் போக்கு! ஒருங்கிணைந்த

# திருவள்ளூர் மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

### மாவட்டச் செயலாளர்கள் ஆவடி சா.மு.நாசர் - திருத்தணி எஸ்.சந்திரன் - வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் கூட்டறிக்கை!

திருவள்ளூர், அக். 28 –

திருவள்ளூர் மாவட்ட கழகச் செயலாளர்கள் ஆவடி சா.மு.நாசர் – திருத்தணி எஸ்.சந்திரன் – வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் ஆகியோர் விடுத்துள்ள கூட்டறிக்கை வருமாறு:

தமிழகத்தில் பெண்களின் பாதுகாப்பு, சட்டம்-ஒழுங்கு நிலை, போதைப்பொருள் புழக்கம், அத்தியாவசியப் பொருட்களின் விலை வாசி உயர்வு, மின்கட்டண உயர்வு, மின்பற்றாக்குறை உள்ளிட்ட மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளைக் கண்டித்து, தி.மு.க. தலைமைக் கழக அறிவிப்பின்படி, வரும் அக்டோபர் 31-ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

திருவள்ளூர் மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில், அக்டோபர் 31-ஆம் தேதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் திருவள்ளூர் நகரத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மகளிர் அணி நிர்வாகிகள், மகளிர் தொண்டரணியினர், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த மகளிர் மற்றும் கழகத் தோழர்கள் பெருந்திரளாகப் பங்கேற்க வேண்டும் என்று திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர், திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் ஆகியோர் கூட்டாகக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

த.வெ.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்று ஆறு மாதங்கள்கூட முழுமையாக நிறைவடையாத நிலையில், தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு, பெண்களின் பாதுகாப்பு மற்றும் மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகள் குறித்து பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன.

பெண்களும் சிறுமிகளும் அச்சமின்றி வாழ்வதற்கான பாதுகாப்பான சூழலை உருவாக்குவது எந்தவொரு அரசின் அடிப்படைக் கடமையாகும். ஆனால், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான குற்றங்கள், கொலைகள், தாக்குதல்கள் உள்ளிட்ட சம்பவங்கள் குறித்த செய்திகள் பொதுமக்களிடையே கவலையை ஏற்படுத்துகின்றன. இத்தகைய குற்றங்களைத் தடுக்க வும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வும், குற்றவாளிகள் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்க வும் அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.







கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல், பெண்களின் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும் 'சிங்கப் பெண்' சிறப்புப் படையின் செயல்பாடுகள் குறித்தும், பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. குற்றங்களைத் தடுப்பதில் காவல்துறையின் செயல்பாடுகள் வலுப்படுத்தப்பட வேண்டிய நிலையில், அரசின் செயல்பாடுகளை விமர்சிக்கும் தி.மு.க. தோழர்கள் மற்றும் ஜனநாயக சக்திகள் மீது நள்ளிரவு நேரக் கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படும் புகார்களும் ஜனநாயக உரிமைகள் குறித்த விவாதத்தை எழுப்புகின்றன.

பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும், குற்றங்களைத் தடுப்பதிலும், சட்டம்-ஒழுங்கைப் பேணுவதிலும் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதே கழகத்தின் வலியுறுத்தலாகும்.

போதைப்பொருள் புழக்கம் இளைஞர்களின் எதிர்காலத்தையும் குடும்பங்களின் நிம்மதியையும் பாதிக்கக்கூடிய தீவிரமான சமூகப் பிரச்சினையாகும். பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்களைப் போதைப்பொருள் பாதிப்பிலிருந்து பாதுகாப்பதுடன், போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனையைத் தடுக்கவும் அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

போதைப்பொருள் விற்பனை வலையமைப்புகளைக் கண்டறிந்து சட்டத்தின் முன் நிறுத்துவதோடு, இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்த வேண்டும். போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக அரசு அளிக்கும் வாக்குறுதிகள் நடைமுறையில் எந்த அளவுக்குச் செயல்படுத்தப்படுகின்றன என்பதையும் வெளிப்படையாக எடுத்துரைக்க வேண்டியது அவசியமாகும்.

த.வெ.க. அரசின் கடந்த ஐந்து மாத கால நிர்வாகத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு தொடர்பாகப் பொதுமக்களிடையே கவலைகள் எழுந்துள்ளன. அரிசி, பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் உள்ளிட்ட பொருட்களின் விலை உயர்வு, நியாயவிலைக் கடைகளில் பொருட்கள் கிடைப்பதில் ஏற்படும் தட்டுப்பாடு, காய்கறிகள் மற்றும் அன்றாடத் தேவைக்கான பொருட்களின் விலையேற்றம் ஆகியவை ஏழை, எளிய மற்றும் நடுத்தரக் குடும்பங்களின் பொருளாதாரச் சுமையை அதிகரிக்கின்றன.

ஆவின் பால் கொள்முதல் விலை தொடர்பான மாற்றங்களும் குழப்பங்களும் பால் விலை மற்றும் விநியோகம் குறித்த கவலைகளை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது. இதன் தொடர்ச்சியாகத் தனியார் பால் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் குடும்பங்களின் செலவினங்களைப் பாதிக்கும் வகையில் உயர்வதாகப் புகார்கள் எழுகின்றன.

அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய், பால், காய்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் நியாயமான விலையில் தடையின்றிக் கிடைப்பதை அரசு உறுதிசெய்ய வேண்டும். விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, குடும்பங்களின் அன்றாட வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டும்.

மின்கட்டண உயர்வு குறித்த கவலைகளுடன், அறிவிக்கப்படாத மின்வெட்டு மற்றும் மின்பற்றாக் குறை தொடர்பான புகார்களும் மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்துகின்றன. வீடுகள், சிறு-குறு தொழில் நிறுவனங்கள், வணிகர்கள் மற்றும் விவசாயிகள் எனப் பல்வேறு தரப்பினரும் தடையற்ற மின்சார விநியோகத்தை நம்பியுள்ளனர்.

ஒருபுறம் மின்கட்டணச் சுமை அதிகரிப்பதாக மக்கள் கவலை தெரிவிக்கும் நிலையில், மறுபுறம் மின்சார விநியோகத்தில் ஏற்படும் தடைகள் அன்றாட வாழ்க்கையையும் தொழில் நடவடிக்கைகளையும் பாதிக்கக்கூடும். எனவே, தேவையான மின்சாரத்தைத் தடையின்றி வழங்குவதற்கான திட்டங்களை அரசு முன்னெடுக்க வேண்டும். மின்வெட்டுப் புகார்களுக்குத் தீர்வு காண்பதுடன், மின்கட்டணக் கொள்கை தொடர்பான மக்களின் கேள்விகளுக்கும் உரிய விளக்கமளிக்க வேண்டும்.

பெண்களின் பாதுகாப்பு, சட்டம்-ஒழுங்கு, போதைப்பொருள் ஒழிப்பு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் சீரான மின்சார விநியோகம் ஆகியவை ஒவ்வொரு குடும்பத்தின் அன்றாட வாழ்க்கையையும் நேரடியாகப் பாதிக்கும் முக்கியமான மக்கள் நலப் பிரச்சினைகளாகும். இவற்றுக்குத் தீர்வு காண வேண்டிய அரசின் பொறுப்பை வலியுறுத்தும் வகையிலும், மக்களின் கவலைகளை ஜனநாயக வழியில் வெளிப்படுத்தும் வகையிலும் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இதில் கழக கொள்கை பரப்பு செயலாளரும் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி, டி.ஜெ. கோவிந்தராஜன் பங்கேற்கிறார்கள்

எனவே, ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த மகளிர் அணி நிர்வாகிகள், மகளிர் தொண்டரணியினர், கழகத்தின் அனைத்து அணிகளையும் சேர்ந்த மகளிர் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் அக்டோபர் 31-ஆம் தேதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் திருவள்ளூர் நகரத்தில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாகக் கலந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.



கோவை, திருப்பூர், நீலகிரி மாவட்ட மாணவர் அணி ஆலோசனைக் கூட்டம் கோவை, வடகோவையில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் கழக மாணவர் அணிச் செயலாளர் ஜெ.வீரமணி தலைமையில், மாநகர் மாவட்டக் கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன் முன்னிலையில் கழக மாணவர் அணி துணை செயலாளர் விஜி கோகுல் வரவேற்புரையில் நடைபெற்றது. இதில் மாவட்ட அமைப்பாளர்கள் அந்தோணி ராஜ், சூலூர் பிரபு, விவேகானந்தன், குகன், விக்ரம், அசோக் உள்பட துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.